ஊவா மாகாண சபை 2025 ஆண்டு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2026 மே 29 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 மே 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் முன்னிலையில் சமர்ப்பிக்க ஆளுனரிற்கும் சம்ர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களினுள்ள 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபழிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 01 பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதும் ஊவா மாகாண சபையின் வருமானம் காசு அடிப்படையின் மீது கணக்கீடு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் வருமானம் கணக்கீடு செய்யப்படும் போது அட்டுறு அடிப்படை மற்றும் காசு அடிப்படை எனும் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 251,172,593 ஆன நிலுவை வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 06 வணிக முற்பணக் கணக்குகளிற்குரியதாக ஈட்டிய ரூபா 15,643,853 ஆன வருமானம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் சேவை வழங்களிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,284,040 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டிய போதும், நிலவுகின்ற நடைமுறை நிலைமையின் மீது வருமானம் காசு அடிப்படையில் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 01 பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

	அதன் பிரகாரம், வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 268,100,486 ஆன கிடைக்க வேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை.		
(ஆ)	மீளாய்வாண்டினுள் தீவை தாக்கிய “தித்வா” சூறாவளி அனர்த்தம் காரணமாக ஊவா மாகாண சபைக்கு சொந்தமான ஆதனம் மற்றும் சொத்துக்களிற்கு ஏற்பட்ட சேதம் சுமாராக ரூபா 20,612 மில்லியன் என தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டுள்ள போதும், அந்த சேதம் 2025 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த நிதிக்கூற்றக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. இந்த சேதம் மாகாண சபையின் மொத்த சொத்துக்களிற்கு ஒப்பாக சுமாராக 24 சதவீதத்தை எடுப்பதால் இவ்வாறான பாரிய சேதத்தை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதன் மூலம் ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரண மீதியின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபழிக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.	ஏற்பட்ட சேதம் சுமாராக ரூபா 20,612 மில்லியன் என தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டுள்ள போதும், திட்டவட்டமாக மதிப்பீடு செய்யப்படாததால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை என மற்றும் 2026 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் மூலம் செம்மையாக்குவதென.	காலப் பகுதிக்குரிய சேதத்தை திட்டவட்டமாக மதிப்பீடு செய்து செம்மையாக்கும் வரை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டினுள் டென்டர் இடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 09 வாகனங்களின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றாத காரணத்தால் திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றகளில் காண்பித்துள்ள வாகன பெறுமதி ரூபா 41,624,210 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.	ஏழத்தில் விற்பனை செய்யப்பட்டட வாகனங்கள் சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.	வருடாந்த கணக்கினுள் சரியாக செம்மையாக்க நடவடிக்கை எடுக்கக வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று பதுள்ளை பிரதேச சுகாரதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதியான ரூபா 61,850,000 தொகை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டு இருக்கவில்லை.	தவறுதலாக உள்ளீடு செய்ய முடியவில்லையெனவும் 2026 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதென.	நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு மீனாய்வாண்டினுள் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 17,347,800 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரண மீதியின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	ஏதிர்பார்த்தவாறு அந்த உபகரணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்ய இயலாது போனதாகவும் 2026 ஆண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென.	அன்பளிப்பாக கிடைக்கும் அனைத்து சொத்துக்களும்குறித்த நிதியாண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	ஊவா மாகாண சபைக்கு சொந்தமான வாகனங்கள் இறுதியாக, 2017 சனவரி 01 திகதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதுவரை 09 ஆண்டுகள் கடந்துள்ள போதும் மீள்மதிப்பீடு செய்யாத காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் தேறிய சொத்துக்கள் தொடர்பாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபழிக்கவில்லை.	2026 ஆண்டில் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதென.	இ.அ.க.நி. 7 இன் 47 ஆம் பந்தி பிரகாரம் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் முன்கொண்டு செல்லும் பெறுமதியுடன் பொருண்மையாக வித்தியாசமாகும் போது மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	ஊவா மாகாண சபை நிதி விதி 509.1 இன் பிரகாரம் வணிக முற்பணக் கணக்குகளிற்கு உரிய மூலதன சொத்துக்களின் வருடாந்த பெறுமானத் தேய்வு, பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் ஊவா மாகாண சபையின் கீழ் காணப்படும் 06 வணிக முற்பணக் கணக்குகளிற்குரியதாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 30,550,812 ஆன போதும் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திற்கு ஆண்டினுள் செலவு வைத்தல் ரூபா 56,526,895 ஆனதில் நிதி நிலைமை மீதான கூற்றில் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 25,976,083 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது.	தாமதத் தவறினால் வணிக முற்பண செயற்பாடுகளின் இலாபம் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாகவும் 2026 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதென.	ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு, பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு சரியாக கணக்கீட்டு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அபிப்பிராயமொன்றை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கண்காய்வு சான்றுகள் போதியதும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளிட்ட அந்த அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது காணக்காய்வின் ஊடாக இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாடடு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவம் அறிவுறுத்தப்பட்டது.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.5.1 தலைப்பு 704 – ஊவா மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, மின்சக்தி மற்றும் வலுசக்தி, நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி தொடர்பான அமைச்சு

(அ) வணிக முற்பணக் கணக்கு

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண அச்சகம் உரிய காலத்தினுள் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 03 சதவீத பங்களிப்புத் தொகையை செலுத்தாததன் மீது ரூபா 102,785 ஆன மிகை அறவீட்டுத் தொகையை செலுத்தியிருந்த போதும் மாகாண நிதி விதி 210.2 பிரகாரம் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகை அறவீடு செலுத்தியமை எந்தவொரு உத்தியோகத்தரினதும் தவறினால் ஏற்படாததால் குறித்த மிகை அறவீட்டுத் தொகையை அச்சகத்தின் செலவாக கவனிக்க வேண்டுமென.	மாகாண நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

ஊவா மாகாண கல்வி அமைச்சு, GEM செயற்திட்டம் மூலம் 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை கொள்வனவு செய்து பாடசாலைகளிற்கு பகிர்ந்தளித்துள்ள ரூபா 224,657,527 ஆன கனணி மற்றும் ஏனைய உபகரணங்களை திட்டவட்டமாக இனங்காணக்கூடிய வகையில் அந்த சொத்துக்களின் குறியீட்டு இலக்க முறையை பயன்படுத்தி ஆவணப்படுத்தி பகிந்தளிக்காத காரணத்தால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று நிதிநிலைமை கூற்றுக்களில் காண்பித்திருந்த அந்த சொத்துக்களின் பௌதீக ரீதியான இருக்கும் தன்மையை திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.	பண்டங்களை இனங்காண்பதற்காக இஸ்டிகர் ஒன்றை அறிமுகம் செய்து அதனை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தரிற்கு போன்றே உரிய பண்டங்களை பொறுப்பேற்கும் அனைத்து பாடசாலை அதிபர்களிற்கும் அறிவுரை வழங்கப்பட்டதென.	ஒழுங்கான முறைமை ஒன்றை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்

ஊவா மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் - 2024 ஆண்டின் நிதிஏற்பாடடின் கீழ் ரூபா 3,546,397 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டு ஹகுருகொள்ள அராவ நெசவுக் கைத்தொழில் மேம்பாட்டு கட்டிடம்	2024 நிதி ஏற்பாட்டின் மீது கட்டிட நிர்மாணம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொண்டு நிலவுகின்ற பிரச்சினைகளை தீரத்துக்	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கத்திற்காக வினைத் திறனாக பயன்பாட்டிற்கு

நிர்மாணிக்கப்பட்டுள்ள போதும் 2025 நவம்பர் 25 திகதி வரை கட்டிடம் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	கொண்டதன் பின்னர் நிலையத்தை பயன்படுத்த முடியுமென.	தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1.5.2 துலைப்பு 705 – ஊவா மாகாண விளையாட்டு மற்றும் சுகாதார நடவடிக்கைகள், சுற்றுலா,, போக்குவரத்து, கலாச்சார மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு

செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2021 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை பாதை அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத 77 பேரூந்து வண்டிகளிலிருந்து ரூபா 6,195,065 ஆன அனுமதிப்பத்திர கட்டணத்தை அறிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஈட்டப்படாத வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ளதானது தற்போது செலுத்தப்படாத 77 பேரூந்து வண்டிகளிற்குரிய புதுப்பிக்கப்படாத பாதை அனுமதிப் பத்திரமெனவும் பாதை அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படுவது வருடாந்த கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கும் அடிப்படையில் எனவும் பாதை அனுமதிப் பத்திரத்தை வருடாந்தம் புதுப்பிக்கும் பொறுப்பை ஏற்பது குறித்த அனுமதிப்பத்திர உரிமையாளர் எனவும் இந்த விடயம் தொடர்பாக 2026/04/06 திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அனுமதிப்பத்திர புத்தகம் மற்றும் லேபல்களை முறைபாக ஒப்படைக்காத செல்லுபடியாகும் காலம் கடந்து ஒரு மாதத்தினுள் புதுப்பிக்காத பாதை அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யவும் தீர்மானித்துள்ளதென.	உரிய காலத்தினுள் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கவும், உரிய காலத்தினுள் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத பாதை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யவும் தேவையான முயற்சி எடுக்க வேண்டும்.

1.5.3 தலைப்பு 706 – விவசாய, நீர்பாசன, கால்நடை உற்பத்தி, நன்னீர் மீன்பிடி தொடர்பான அமைச்சு

(அ) பணிப் பொறுப்பை மேற்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தேசிய கொள்கைகள் மற்றும் மாகாண கொள்கை பிரகாரம் மீன்பிடி கைத்தொழில் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு கைத்தொழிலின் ஊடாக தேசிய மற்றும் பிராந்திய மக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டும் நோக்கில் தயாரித்திருந்த ஊவா மாகாண இடைக்கால பகுதிரீதியான நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தில் (2024 – 2026) 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் செயற்படுத்த	2025 ஆண்டில் நன்னீர் மீன்பிடி நிகழ்சித் திட்டத்தில் மீன் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு முன்னுரிமை வழங்கும் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த இயலாது போனதாகவும் 2026 ஆண்டில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதென.	அங்கீகார அபிவிருத்தி திட்டம் பிரகாரம் செயற்பாடுகளை காலரீதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டமிட்டிருந்த ரூபா 20,270,000 பெறுமதியான செயற்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		

(ஆ) வணிக முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று விவசாய அமைச்சின் விதை உருளை கிழங்கு கணக்கில் நிலுவை கடன் மீதி ரூபா 7,612,833 ஆனதுடன் 11 ஆண்டுகளிற்கு அதிக காலமாக மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காண்பித்திருந்ததுடன் கடன் தவணை மாதாந்தம் முறையாக அறவிடப்பட்டிருக்கவில்லை.	கடன் அறவீட்டு செயற்பாடுகளிற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளதாகவும் கடன் அறவிடப்பட்டு வருவதாகவும்.	உரிய காலத்தில் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 தலைப்பு 709 – பிரதி பிரதான செயலாளர் (ஆனணி மற்றும் பயிற்சி) அலுவலகம்

(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	இணக்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2011 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் 2011/1 கொண்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை, 2006 ஒக்டோபர் 17 திகதிய 1467/15 கொண்ட அதிவிசேட வர்த்தமானி	பிரதி பிரதான செயலாளர் (ஆனணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திற்கு சொந்தமான ஒஹிய பயிற்சி நிலையத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் தகைமை சான்றிதழை பெற்றுக் கொள்ளல், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ளல் மற்றும் மாற்றுத் திறனுடன் கூடிய நபர்களிற்கு பிரவேசிக்கும் வசதிகளை வழங்குதல் எனும் சட்டரீதியான தேவைப்பாடுகளை நிறைவு செய்யதிருக்கவில்லை.	இக் கட்டிடத்திற்காக NBRO அறிக்கை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாததுடன், 2026 ஜுலை 01 திகதிய கடிதம் மூலம் அந்த அறிக்கைகளை பெற்றுக் கொள்ள கோரியுள்ளதாகவும் எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளர் பிரவேசத்தை தயாரிப்பதன் தேவைப்பாட்டை கவனத்திற் கொள்வதென.	நிர்மாணத்தை ஆரம்பிக்க முன்னர் குறித்த அனுமதிகளை பெற்றுக் கொள்ள மற்றும் நிர்மாணத்தை திட்டமிடும் போது 1467/15 சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) ஆளணி நிருவாகம்

(i) மாகாண சபை நிறுவனங்களின் ஆளணியினர் (கல்வி மற்றும் சுகாதாரம் தவிர்த்த)

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதியில் ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) 174 ஊழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களின் வெற்றிட எண்ணிக்கை 965 ஆகும்.	வெற்றிடங்களிற்கான ஆட்சேர்பபு நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் குழுவின் அங்கீகாரத்திற்காக தற்போது சமர்பித்துள்ளதாகவும், நாடளாவிய ரீதியிலான சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் குறித்த வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஊவா மாகாண சபையின் கீழ் காணப்படும் பற்றாக்குறை ஆளணியின் பதவிகளிற்கு இடையே அதிக அளவு ஆசிரியர் சேவைக்குரியதாகவும் அவற்றில் 1606 அளவை ஆட்சேர்ப்பதற்காக பிரமதர் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், தற்போது அந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதென.	அங்கீகார ஆளணியை பேணிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) பாடசாலை ஆளணியினர்

மீளாய்வாண்டு இறுதியில் 1223 உதவி ஆளணியினர் மற்றும் ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) 07 ஊழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதிபர் சேவையில் 241 பதவிகள் மற்றும் ஆசிரியர் சேவையில் 2905 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன.	அதிபர் மற்றும் ஆசிரியர் சேவைகளின் வெற்றிட எண்ணிக்கையை கல்வி அமைச்சிற்கு அறிவித்து அங்கீகார ஆளணியை பேணிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாகவும் ஆட்சேர்பு செயற்பாடுகளின் பின்னர் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளிற்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை நிலைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென.	- மேற்படி -

(iii) சுகாதார ஆளணியினர்

சுகாதார ஆளணியில் ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) 08 ஊழியர்களின் மிகை காணப்பட்டதுடன் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களின் வெற்றிட எண்ணிக்கை 572 ஆனதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடமை தேவைப்பாட்டின் மீது நிரந்தர ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் வரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்வு மேற்கொண்டுள்ளதாகவும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதென.	- மேற்படி -

(இ) **பெறுகைகள் - வழங்கல் மற்றும் சேவைகள்**

பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திற்கு சொந்தமான ஒஹிய பயிற்சி நிலையத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலையின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் (2006) இன் 5.4.6 பிரகாரம், அடிப்படை ஒப்பந்தத் தொகையை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட ரூபா 15,842,404 ஆன கொடுப்பனவிற்காக நிருத்தி வைக்க வேண்டிய ரூபா 792,120 தொகையை நிருத்தி வைக்கும் காசாக அறவிட்டிருக்கவில்லை.	ஒப்பந்த உடன்படிக்கையில் நிருத்தி வைக்கும் தொகைக்காக அடிப்படை ஒப்பந்த பெறுமதியின் 5% யை அறவிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் நிருத்தி வைத்தல் தொகையை நிருத்தி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதென.	விலகல்களுடன் ஒப்பந்தம் திருத்தப்படுவதால் நிருத்தி வைத்தல் தொகையை வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.5 **தலைப்பு 710 - சுகாதார சேவைகள் திணைக்களம்**

(அ) **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	**இணக்காமை**	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை	மொனராகல பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதனுடன் இணைந்த 42 நிறுவனங்கள், 2017 முதல் 2024 வரையான காலப் பகுதியினுள் ரூபா 2,622,000 செலவில் தனியார் நிறுவனமொன்றில் இருந்து 46 விரல் அடையாள இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்த போதும், மொனரானல பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தவிர அதனுடன் இணைந்த 42 நிறுவனங்களில் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி வரவு மற்றும் வெளிச் செல்லுகையை குறிப்பிட்டிருக்காததுடன், மீளாய்வாண்டில் ஆளணியினரிற்காக சம்பளம், படிகள், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை சம்பளமாக ரூபா 2,363 மில்லியன் ஆளணியினரிற்காக செலுத்தப்பட்டிருந்தது.	தொழிற் சங்கங்களின் தாக்கம் காரணமாக விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதில்லை என, உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி முன்நடவடிக்கைகளை தீர்மானிப்பதென.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை

சியபலாண்டுவ ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான நோயாளர் வண்டியொன்று 2025 ஏப்ரல் 12 திகதி விபத்துக்குள்ளாகி ஒரு தனியார் நிறுவனத்தினால் ரூபா 313,500 தொகை செலவில் திருத்தப்பட்டிருந்தது. விபத்து இடம்பெற்று 09 மாதங்களிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் மாகாண நிதி விதி 104(4) பிரகாரம் இறுதி அறிக்கையை தயாரித்து காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து மீள்நிரப்பப்படாத ரூபா 110,000 தொகையை பொறுப்பு வாய்ந்த தரப்பினிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் திருத்த வேலைகளும் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	விபத்து தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் திருத்த செலவு ரூபா 269,500 தொகை எனவும் அவற்றில் ரூபா 203,500 தொகையான காப்புறுதி செலுத்தப்பட்டுள்ளதெனவும் காப்புறுதியால் மேவுகை செய்யப்படாத தொகையை காப்புறுதி அறிக்கை பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதென.	பதிலை ஏற்றுக் கொள்ள முடியாது. மாகாண நிதிவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்ததரப்பினரிட மிருந்து அறவிட வேண்டும்.

(இ) செயற்பாட்டு செயற்திறனின்மை

(i)	பதுள்ள பிரதேச மருத்துவ வழங்கல் அலகில் சுகாதார முறைமையினுள் 2025 செப்டம்பர் 02 திகதியளவில் நிலவிய செயற்படாத 05 களஞ்சியகளில் ரூபா 71,318,323 தொயையான மருந்து இருப்பு மீதி காட்டப்பட்ட போதும், அந்த இருப்பு மருத்துவ வழங்கல் அலகினுள் பௌதீக ரீதியாக காணப்படாததுடன் செயற்படாத இரண்டு களஞ்சியங்களில், கணக்காய்வு திகதியன்று பௌதீக ரீதியாக இருப்பு மீதியொன்று அவதானிக்கப்பபடாத போதும் தொகுதியின் மூலம் "Order" மற்றும் "Distribution" ஆக ரூபா 56,978,393 பெறுமதியான மருந்து வினியோகிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த மருந்துகளை வைத்தியசாலை மற்றும் களஞ்சியங்களினால் பெற்றுக் கொண்டிருக்காததனால் அந்த இருப்புக்களின் பௌதீக ரீதியான இருக்கும் தன்மையை கணக்காய்வின் போது ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	முன்னர் இருந்த முறைமையிலிருந்து தரவுகளை பரிமாற்றும் போதும் தயாரிக்கப்பட்ட களஞ்சிமொன்று எனவும், பிரதேச மருத்துவ வழங்கல் நிறுவனத்திடம் இந்த பிரச்சினை தொடர்பாக முறையான விசாரணைக்காக விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதென.	விரைவில் விசாரணையை பூர்த்தி செய்து கணக்காய்விற்கு அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii)	பதுள்ள பிரதேச மருத்துவ வழங்கல் அலகில் செயற்படும் களஞ்சியங்களில் சுகாதார முறைமையினூடாக மருந்துகளை பெற்றுக் கொள்ள பல வைத்தியசாலைகளினால் பதுள்ள பிரதேச மருத்துவ வழங்கல் அலகிற்கு வழங்கியுள்ள கட்டளைகளிற்காக முறைமையினால் இருப்பு வினியோகித்திருந்த போதும் ரூபா 30,697,312 பெறுமதியான இருப்பு 2025 செப்டம்பர் 02 திகதி வரை வைத்தியசாலைகளிற்கு கிடைத்தமைக்கு முறைமையினால் குறிப்பிட்டிருக்காதமை மற்றும் சுகாதார முறைமையின் ஊடாக கட்டளை கிடைக்கப் பெறாது, பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைகளிற்கு முறைமையின் ஊடாக வழங்கிய (Distribution) ரூபா 29,924,707 பெறுமதியான மருந்து இருப்புக்கள் 2025 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை குறித்த வைத்தியசாலைகளிற்கு கிடைத்ததாக வைத்தியசாலை முறைமையின் ஊடாக உறுதி செய்யாத காரணத்தால் அந்த இருப்புக்களின் பௌதீக ரீதியாக இருக்கும் தன்மையை ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	குறித்த STV பத்திரம் தற்பொது நிறுவனத்தின் மூலம் பொறுப் பேற்றுள்ளதாகவும் இந்த நடவடிக்கை தொடர்பாக விசாரணை நடாத்த விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதென.	சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வையுடன் இருப்பு கட்டுப்பாட்டிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விசாரணையை விரைவில் பூர்த்தி செய்து கணக்காய்விற்கு அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) வெளிப்படையான முறைகேடுகள்

	மொனராகல பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான இங்கினியாகல பிரதேச வைத்தியசாலை காணியில் 02 ஏக்கர் அளவான காணித் துண்டொன்று முறையான அங்கீகாரமின்றி நிலையப் பொறுப்பு மருத்துவ அதிகாரியினால் 06 நிபந்தனைகளுடனான கடிதமொன்றை கையொப்பமிட்டு 2023 செப்டம்பர் 01 முதல் வெளி நபர் ஒருவரிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது.	இது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு எதிர்காலத்தில் அறிக்கையிடுவதென.	விசாரணையை துரிதப்படுத்த நடவடிகைகை எடுக்க வேண்டும்.

(உ) இனங்காணப்பட்ட நட்டங்கள்

பிபிலை ஆதார வைத்தியசாலையில் கணக்கிலக்கம் 3970600219 கொண்ட மின்சார மாணிக்குரிய 2023 திசெம்பர் மாதம் செலுத்த வேண்டிய மின்சார கட்டணமாக ரூபா 1.8 மில்லியனான பட்டியலிற்குரிய கொடுப்பனவு தாதியர் தங்கியிருக்கும், விடுதியின் கணக்கிலக்கம் 396675508 இற்கு செலவு வைத்த காரணத்தால் மற்றும் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்ய தாமதித்ததால் 2023 ஜுலை 31 திகதி முதல் 2025 ஜுன் 30 வரையான காலப் பகுதிக்குரியதாக செலுத்திய ரூபா 406,067 ஆன தாமதக் கட்டணத்தை மீளப் பெற்றுக் கொள்ள அல்லது பொறுப்பு வாயந்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மின்சார சபைக்கு அறித்த பின்னர் அவர்களினால் அறவிடப்பட்ட தாமதக் கட்டணத்தை அகற்றுவதற்காக தற்போது நடவடிக்கை எடுத்துவருவதாக மின்சார சபையிலிருந்து கிடைக்கும் பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதெந.	கணக்கை சரியாக இனங்கண்டு கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் மிகை கொடுப்பனவு தொடர்பாக நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொஸ்லந்த மாவட்ட வைத்தியசாலை வளவை சுற்றி கம்பி வேலி அமைக்கும் போது, கொஸ்லந்த - வெல்லவாய பிரதான வீதிக்கு முன்நோக்கியுள்ள பகுதியில் மதிலொன்றை நிர்மாணித்து இருக்கையில், அந்த மதிலிற்கு முன்பாக மீண்டும் கம்பி வேலியொன்றை நிர்மாணிக்க ரூபா 392,812 ஆன ஆக்கபூர்வமற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பாதுகாப்பு பதிலிற்கு முன்பகுதி வெளித்தரப்பினரினால் ஏனைய நடவடிக்கைக்காக பயன்படுத்துவதை தவிர்க்க வேலி அமைக்கப்பட்டதென.	புலனாய்வொன்றை மேற்கொண்டு அதன் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ) விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்

(i)	பண்டாரவலை மாவட்ட வைத்தியசாலையின் புதிய அறுவை சிகிச்சை நிலையத்திற்காக 2024 ஜுன் 25 திகதி கொள்வனவு செய்து பொருத்தியுள்ள ரூபா 5,143,000 பெறுமதியான 09 வாயு பதனாக்கி இயநிரங்கள் 2025 செப்டம்பர் 02 திகதியளவில் 15 மாதங்களைவிட அதிக காலம் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன. இந்த இயந்திரங்களிற்காக வழங்கியிருந்த 03 ஆண்டு கால உத்தரவாத காலத்தின் ஒரு வருட காலமளவு முடிவடைந்திருந்தது.	நிபுணத்துவ மருத்துவ குழுவொன்று வைத்தியசாலை அறுவை சிகிச்சை நிலையத்தை பரீட்சித்த பின்னர் அங்கு மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பான பரிந்துரை பிரகாரம் அதன் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நவீனமயமாக்கல் நிறைவடைந்த பின்னர் பயன்படுத்த முடியுமென.	சொத்துக்களை விளைவற்று வைத்திருக்காமைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii)	ஆரம்ப சுகாதார சேவைகள் தொகுதியை வலுப்படுத்தும் செயற்திட்ட (PSSP) நிதி ஏற்பாட்டின் கீழ் பச்சரை மாவட்ட வைத்தியசாலையின் வெளி நோயளார் பிரிவை இணைய மயப்படுத்த 2019 ஆண்டினுள் ரூபா 2,701,875 செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் 2025 ஒக்டோபர் 14 திகதி வரை வெளி நோயாளர் பிரிவை இணைய மயப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இணைய மயப்படுத்துவதற்கான உதிரிப் பாகங்களை பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,002,500 ஆன செலவும் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. அவ்வாறே, பச்சரை மாவட்ட வைத்தியசாலையில் ரூபா 755,455 பெறுமதியான உபகரணங்கள், பண்டாரவளை வைத்தியசாலையில் ரூபா 1,431,450 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் கிராந்துருகோட்டை வைத்தியசாலையில் ரூபா 1,406,750 பெறுமதியான உபகரணங்களாக ரூபா 3,593,655 பெறுமதியான இணைய மயப்படுத்தும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.	இணைய மயப்படுத்த தேவையான மென்பொருள் தொகுதி கிடைக்காத காரணத்தால் இந்த உபகரணங்கள் விளைவற்று காணப்படுவதென.	எதிர்பார்தத நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	சீனா அரசாங்கத்தின் அன்பளிப்பாக கிடைத்து 2022 ஒக்டோபர் 28 திகதி கிராந்துருகோட்டை சிறுநீரக நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு வழங்கியிருந்த சந்தைப் பெறுமதி சுமார் ரூபா 8,500,000 ஆன நடமாடும் இரசாயண பேருந்து வண்டியை 2025 நவம்பர் 14 திகதி வரை ஊவா மாகாண சிறுநீரக நோயாளர்களின் பிரயோசனத்திற்கு பயன்படுத்தாது சுமார் 03 ஆண்டுகள் விளைவற்று இடப்பட்டு மீண்டும் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. பேருந்து வண்டி மற்றும் அதனுடைய இரசாயணகூட உபகரணங்களின் பயன்பாடு தொடர்பாக சீனா அரசாங்கத்தின் மூலம் மூன்று அலுவலர்களிற்கு	நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக மற்றும் இரசாயணகூட தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியவில்லையெனவும் தற்போது வரிசை அமைச்சிற்கு ஒப்படைந்துள்ளதெனவும்.	கிடைக்கும் அன்பளிப்பை பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	பயிற்சியும் வழங்கப்பட்டிருந்த போதும், அவர்களின் சேவையை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.		
(iv)	பண்டாரவலை மாவட்ட வைத்தியசாலை வளவில் ரூபா 1,934,076 தொகை செலவில் நீர் சுத்திகரிப்பு தொகுதியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் 2025 ஜுலை 22 திகதி வரை இந்த நீர் சுத்திகரிப்பு தொகுதியிற்கு தேவையான நீர் வழங்கலை தொடர்பு படுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தால் பயன்பாட்டிற்கு எடுத்திருக்காததுடன் ரூபா 1,273,000 தொகை செலவில் 2023 திசெம்பர் 22 ஆம் திகதி கிராந்துரு கோட்டே வைத்தியசாலையில் இஸ்தாபிக்கப்பட் ட நீர் சுத்திகரிப்பு தொகுதி பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது.	பண்டாரவலை மாவட்ட வைத்தியசாலையின் நீர் சுத்திகரிப்பு தொகுதிக்கு நீர் வழங்கலை தொடர்புபடுத்த இவ்வாண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நீர் சுத்திகரிப்பு தொகுதியை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதென. கிராந்துரு கோட்டே வைத்தியசாலையின் நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக பயன்படுத்தவில்லை எனவும் அதனை தீர்ப்பதற்கு குறித்த நிறுவனத்தை அறிவுருத்தியுள்ளதென.	சாத்தியப்பாட்டு ஆய்வினை மேற்கொண்ட பின்னர் செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுடன் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	**பெறுகைகள் - வழங்கல் மற்றும் சேவைகள்**		
(i)	பதுள்ளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் சுகாதார நிறுவனங்களில் 51 பெயர் பலகைகளை நிர்மாணிப்பதற்கான பெறுகைகளின் போது, 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 பந்திக்கு இணங்கும் வகையில் மொத்த கிரய மதிப்பிப்பீடொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொண்டிருக்காததுடன் 8.9.1 பந்திக்கு இணங்கும் வகையில் முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.	மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படவில்லை என ஏற்றுக் கொள்வதாகவும் ஒரு பெயர் பலகைக்கான கிரய மதிப்பீட்டை தயாரித்து அதனை ஏனைய பெயர் பலகைகளுக்காக பயன்படுத்தியுள்ளதாகவும், இந்த நடவடிக்கைகள் தொடர்பாக முறையான விசாரணை நடாத்த விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதென.	பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2022 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை வைத்தியசாலைகளில் மூல/சபைத்த உணவு வழங்க அளவுத் திட்டம் தயாரிக்க பிரதேச விலைகளை உரிய முறைமையின் படி பெற்றுக் கொண்டிருக்காததுடன், விலைமனு ஆவணத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விலைமனு ஒப்படைத்த பின்னர் மனுதாரரிற்கு ஏனையவர்களிற்கு ஒப்படைத்தல் அல்லது உப குத்தகை வழங்குதல் கூடாத போதும், எதிமலே,	பிரதேச விலைகளை அடிப்படையாக்க கொண்டு மூல/சமைத்த உணவு வழங்க அளவுத் திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரிப்பதாகவும் ஒப்பந்தம் செய்த வழங்கனர்களினால் உப குத்தகை வழங்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக விசாரணையொன்றை நடாத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.	பெறுகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனமல்வில மற்றும் ஹிகுருகடுவ பிரதேச வைத்தியசாலைகளில் ஒப்பந்தங்கள் ஏனைய தரப்பினரிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1.5.6 தலைப்பு 711 - கல்வி திணைக்களம்

(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	இணக்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2018 ஜுலை 18 திகதிய இலக்கம் 03/2018 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (II) பந்தி	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரத் பெற்றுக் கொள்ளாது ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 06/2018 கொண்ட 2018 ஜுலை 24 திகதிய உள்ளக சுற்றறிக்கையை அடிப்படையாக்க கொண்டு 2024 ஆண்டில் ரூபா 2,189,269 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன.	ஊவா மாகாண மதிப்பிற்குரிய ஆளுனரின் அங்கீகாரத்துடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட இலக் கம் 06/2018 கொண்ட 2018.07.24 திகதிய உள்ளக சுற்றறிக்கையில் உள்ளடங்கும் அறிவுரை மற்றும் எல்லைகளின் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளதென.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2010 ஏப்ரல் 23 திகதிய இலக்கம் 2010/16 கொண்ட கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி	உரிய நியமம் மற்றும் தரத்திலான வினாத்தாழ்களை பாடசாலை மட்டத்தில் தயாரிப்பதற்காக முறையான நிகழ்சித் திட்டமொன்றை பாடசாலை மட்டத்தில் செயற்படுத்தாது பதுள்ளை மாவட்டத்தில் 06 வலைய கல்வி அலுவலகங்களிற்கு உரிய 274 பாடசாலைகள் தனியார் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட ரூபா 13,235,644 பெறுமதியான வினாத்தாழ்களை கொள்வனவு செய்திருந்தன.	இந் நிலைமைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டாமென அறிவுரை வழங்கியுள்ளதாக மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள், விடய நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமித்து குறித்த வலையங்களிற்குரிய வினாத்தாழ்களை தயாரித்து, ஊவா மாகாண சபை அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ள வேலைத் திட்டமொன்றை தயாரித்து வருவதென.	- மேற்படி -

(ஆ) செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(i)	2020/2024 காலப் பகுதியில் பிபிலை, தனமல்வில மற்றும் வெல்லவாய வலைய கல்வி அலுவலகங்களிற்குரிய 144 பாடசாலைகளிற்கு பாடசாலை அடிப்படை கற்கையை வலுவூட்டும் நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்த பாடசாலை அபிவிருத்தி சங்கங்களிற்கு செலவு வைத்திருந்த ரூபா 38,019,969 தொகையின் 06 பாடசாலைகளில் ரூபா 2,309,174 தொகை விளைவற்று காணப்பட்டதுடன் 16 பாடசாலைகளில் ரூபா 3,088,461 தொகை அங்கீகார நிகழ்சித் திட்டங்களிற்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது.	விளைவற்றதாக பணத்தை நிருத்தி வைத்திருந்த தொகையை விரைவில் குறித்த நிகழ்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஈடுபடுத்துமாறு அறிவுருத்த நடவடிக்கை எடுப்பதென தெலிச நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான கைநூல்கள் போன்றவற்றை பாடசாலைக்கு வெளியே பிரதி பண்ணும் போது பாரிய தொகை செலவாவதால் பாடசாலையில் காணப்படும் பிரதிபண்ணும் இயந்திரத்தை பயன்படுத்தி மேற்கொள்ள காகிதாதிகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதென.	குறித்த நோக்கத்தை அடைந்து கொள்ள இயலும ானவாறு நிதிஏற்பாட்டை செலவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	சாதாரண கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் (GEMP) அடிப்படை நோக்கமான சாதாரண கல்வி முறைமையின் தரத்தை உயர்த்த மற்றும் கற்வித்தலை வலுவூட்டுவதற்கான கடன் உடன்படிக்கையின் செலவினம் தொடர்பான குறிகாட்டியை (DLI) மூலம் விபரிக்கப்ட்டிருந்த நோக்கத்திற்கிடையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் கற்றல் பெறுபேருகளை மேம்படுத்துவது பிரதான இரண்டு நோக்கமாக இருந்த போதும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து கடந்த 05 ஆண்டு காலப்பகுதியினுள் பதுளை மாவட்டத்தில் 06 கல்வி வலையங்களிற்குரியதாக தெரிவு செய்யப்பட்ட 271 மாதிரி பாடசாலைகளினுள் 37 பாடசாலைகளில் க.பொ.த (சா.த) பரீச்சையில் ஆங்கிலம் மற்றும் கணித விடயங்களின் சித்தியடைந்த சதவீதங்களில் தொடர்சியான பின்னடைவு அவதானிக்கப்பட்டது.	ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களின் பெறுபெறுகளை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த தரப்பினரை அறிவுருத்த நடவடிக்கை எடுத்துள்ளதென.	செயற்திட்டங்களின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) வெளிப்படையான முறைகேடுகள்

(i)	2021 செப்டம்பர் 29 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 2.1 பந்திக்கு மாற்றமாக பதுள்ளை கல்வி வலையத்திற்குரிய பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு	புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகவும் அப் புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் பரிந்துரை	புலனாய்வை துரிதமாக பூர்த்தி செய்து அதன் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை

	வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 3,546,084 ஆன 03 நிர்மாண ஒப்பந்தங்கள் பதுள்ளை வலைய கல்வி அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த வேலைகளிற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் கொடுப்பனவு செய்த வவுசர்களில் பெயர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு குறித்த காசோலை கிடைத்திருக்கவில்லை எனவும் அந்த வேலைகளிற்குரிய ரூபா 3,131,885 பெறுமதியான 09 காசோலைகள் நிர்மாணத்தை மேற்பார்வை செய்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மற்றும் அவரின் முகவரியிலே வசிக்கும் செக்ரோல்களில் தச்சு மற்றும் கொத்தராக பெயர் குறிப்பிடும் வேறொரு வியாபாரியின் வங்கி கணக்கிற்கு செலவிடப்பட்டிருந்தது.	பிரகாரம் எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	எடுக்க வேண்டும்.
(ii)	பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் 03 பாடசாலைகளில் கட்டிட திருத்த ஒப்பந்தத்தை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் மேற்கொள்வதாக உணர்த்தி போலியான ஆவணங்களை தயாரித்து ரூபா 1,107,676 தொகை சட்டவிரோத பணப்பயன்பாடு இடம்பெற்றிருந்தது.	விசாரணையொன்றை மேற்கொண்டு தேவையான முன் தீர்மானங்களை எடுப்பதென.	புலனாய்வு பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	ப/வேவல்ஹின்ன வித்தியாலயத்தில் 80'x20' கட்டிடத்தை திருத்துவது தொடர்பாக 2024 திசெம்பர் 26 திகதிய இலக்கம் 24/12/02 கொண்ட வவுசர் மூலம் ரூபா 234,000 ஆன தொகை தனியார் பலகை விற்பனை நிலையமொன்றிற்கு செலுத்தியிருந்த போதும், அந்த வவுசரில் மற்றும் காசோலை பொறுப்பேற்கும் பதிவேட்டில் போலியான முத்திரை மற்றும் கையொப்பத்தை இட்டு குறித்த காசோலை பெறப்பட்டிருந்ததாகவும் குறித்த தொகை தனியார் பலகை விற்பனை நிலைய உரிமையாளரினால் பெறப்படவில்லை எனவும் உறுதியானது.	புலனாய்வை மேற்கொள்ள கல்வி அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகவும் அந்த புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் பரிந்துரை பிரகாரம் எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	புலனாய்வை துரிதமாக பூர்த்தி செய்து அதன் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	**ஒப்பந்த நிருவாக குறைபாடுகள்**		
	ப/உடவெல மத்திய மகா வித்தியாலயத்தின் மெத்தா கட்டிட திருத்தத்திற்காக 2025 செப்டம்பர் 22 திகதி உடவெல கிராமிய அபிவிருத்தி சங்கம் மற்றும் பதுள்ளை வலைய கல்வி அலுவலகத்தின் பணிப்பாளரிற்கு இடையே	விசாரணையொன்றை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென.	விசாரணையை துரிதமாக பூர்த்தி செய்து அதன் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை

	ரூபா 1,969,023 ஆன மதிப்பீட்டுத் தொகைக்கு உடன்படிக்கை செய்திருந்ததுடன் சங்கத்தினால் இந்த கட்டிட திருத்தத்திற்குரிய ஒப்பந்தம் உப குத்தகை வழங்கப்பட்டிருந்தது. அக் கட்டிட திருத்தத்திற்குரிய இலக்கம் 2.1 மற்றும் 3.1 கொண்ட வேலை விடயங்களான முறையே வகுப்பறைக்கு வெளியே கால்வாயுடனான கொரிடோவை கொங்கிரீட் செய்தல் மற்றும் வகுப்பறைக்கு உள்ளே கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 946,545 ஆன மதிப்பீட்டின் பிரகாரம் நிலத்தை கொங்கிரீட் இடும் போது அதன் தடிப்பு 75 மில்லி மீற்றராக வேண்டிய போதும் கள பரீட்சிப்பின் போது வகுப்பறைக்காக இடப்பட்ட கொங்கிரீட்களின் தடிப்பு 50 மில்லி மீற்றர் எனவும், வெளிப்புர கால்வாயுடன் கூடிய கொரிடோர் கொங்கிரீடின் தடிப்பு 37.5 மில்லி மீற்றர் எனவும், விரிவு இணைப்புக்கள் இடப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.		எடுக்க வேண்டும்.
(உ)	**செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் - தாமதித்த செயற்திட்டங்கள்**		
	மொ/ஹிங்குருகடுவ மகா வித்தியாலயத்திற்கு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 2019/2021 காலப் பகுதியில் நீர் செயற்திட்டமொன்றை செயற்படுத்த மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 846,832 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், நீர் செயற்திட்ட நிர்மாணத்திற்காக பாடசாலை அபிவிருத்தி சங்க நிதியத்திலிருந்து ரூபா 162,887 தொகை உள்ளடங்கலாக ரூபா 1,009,719 செலவிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் மாதத்தில் செயற்திட்ட ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், நீரை பெற்றுக் கொள்ளும் பிரச்சினை காரணமாக 2025 ஒக்டோபர் 16 திகதி அளவிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை.	விசாரணையொன்றை மேற்கொண்டு தேவையான முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதென.	எதிர்வரும் செயற்திட்ட பணிகளை ஆரம்பிக்க முன்னர் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ளவும், காணப்படும் பிரச்சினையை தீர்ப்பதற்காக மாற்று மதிப்பீட்டை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(ஊ)	**ஆளணியினர் நிருவாகம்**		
(i)	வெலிமட கல்வி வலைய அலுவலகம் மற்றும் 02 கோட்ட அலுவலகங்களுக்கான அங்கீகார முகாமைத்துவ உதவியாளர் பதவி எண்ணிக்கை 30 ஆன போதும்	வருடாந்த இடமாற்ற செயற்முறையின் போது குறித்த அலுவலர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை	மேலதிக ஆளணி நிலைமை ஏற்படாதவாறு வலைய

	2025 செப்டம்பர் 22 திகதி 37 முகாமைத்துவ உதவி அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காரணத்தால் 07 முகாமைத்துவ உதவி அலுவலர்களின் மிகையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த மிகை ஆளணியினரை பேணிச் செல்வதற்காக 2024 சனவரி 01 திகதி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை ரூபா 8,121,797 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.	எடுத்துள்ளதென.	அலுவலகத்திற்கு இடையே ஆளணி சமப்படுத்தலை பேணிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	பதுள்ளை மாவட்டத்தினுள் அமைந்துள்ள 03 கல்வி வலையங்களிற்குரிய 217 பாடசாலைகளில் 1050 ஆசிரியர்களின் பற்றாக்குறையும் 82 பாடசாலைகளில் 212 ஆசிரியர்களின் மிகையும் நிலவுவதுடன் இந்த கல்வி வலையங்களில் நகரை அன்மித்த பாடசாலைகளிற்கு அங்கீகார ஆசிரியர் எண்ணிக்கையிலும் அதிக ஆசிரியர் எண்ணிக்கையை இணைத்துள்ளதால் நகரை அன்மித்த பாடசாலைகளில் ஆசிரியர் மிகை ஏற்பட்டுள்ளது. நகரை அன்மித்த பாடசாலைகளில் ஆசிரியர் மிகை காணப்படும் பின்னணியில் முறையான ஆசிரியர் சமப்படுத்தல் ஊடாக அந்த மிகை ஆசிரியர்களை பற்றாக்குறை காணப்படும் பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்தேனும் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்காது மேலதிக ஆசிரியர் ஆளணியினரை பேணிச் சென்று அவர்களில் 199 பேர்களிற்காக அந்த கல்வி வலையம் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை சம்பளமாக ரூபா 97,516,803 தொகை செலுத்தியிருந்தது.	இடமாற்ற செயற்முறையின் போது இந்த மிகையை மற்றும் பற்றாக்குறையை சமப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	பொருத்தமானவாறு ஆசிரிய சமப்படுத்தலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	பதுள்ளை மாவட்டத்தின் 03 கல்வி வலையங்களிற்குரிய பாடசாலைகளிற்கு இணைக்கப்பட்டுள்ள ஆளணியினரை விஞ்சி ஆசிரியர் சேவையின் 88 பேர்களை கடமையில் ஈடுபடுத்தி 2024 சனவரி 01 திகதி முதல் 2025 செப்டம்பர் 30 திகதி வரை ரூபா 133,842,443 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டுள்ளது. எனினும் அந்த 03 கல்வி வலையங்களில் 106 பாடசாலைகளில் அதிபர் சேவையில் 106 அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அதற்காக ஆசிரியர் சேவையின் 83 பேர்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுத்தி 2025 செப்டம்பர் 30 திகதி வரை பண்டாரவலை மற்றும்	அதிபர்களை இடமாற்றம் செய்வது தொடர்பான கொள்கையொன்றை ஊவா மாகாணத்தினுள் செயற்படுத்தாததால் இடமாற்றம் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுவதாகவும், அதிபர்களை ஆட்சேர்த்த பின்னர் வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளிற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் பதிற்கடமை அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பதில்லையென.	பொருத்தமானவாறு அலுவர்களை பாடசாலைகளிற்கு இடையே சமப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	பஸ்ஸர 02 கல்வி வலையங்களில் 35 ஆசிரியர்களிற்காக ரூபா 4,767,600 தொகை அதிபர் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. முறையானவாறு அதிபர் சேவையின் அலுவர்களை சமப்படுத்தாத காரணத்தால் மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளது.		
(iv)	பதுள்ளை மாவட்டத்தில் 02 பல்வி வலையங்களிற்குரிய 07 பாடசாலைகளிற்காக இரசாயணகூடங்கள் இன்றி 07 இரசாயணகூட ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தி 2024 சனவரி 01 திகதி முதல் 2025 செப்டம்பர் 30 திகதி வரை ரூபா 4,598,568 தொகையும் 02 பாடசாலைகளில் ஒரு இரசாயணகூடம் மாத்திரம் இருக்கையில் இரசாயணகூட ஊழியர்கள் இருவர் வீதம் கடமையில் ஈடுபடுத்தி மேலதிக இரண்டு ஊழியர்களிற்கு ரூபா 2,024,636 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.	பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஆளணியினரை இடமாற்றம் செய்வது தொடர்பாக உரிய முறைமையொன்றை செயற்படுத்தாத காரணத்தால் இந்த பிரச்சினையான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இடமாற்ற கொள்கையொன்றை தயாரித்த பின்னர் அவர்களை உரியவாறு நிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென.	கடமை தேவைப்பாட்டின் பிரகாரம் அலுவர்களை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v)	பதுள்ளை மாவட்டத்தில் 02 கல்வி வலையங்களிற்குரிய 14 பாடசாலைகளிற்காக வாசிகசாலைகள் இன்றி 14 வாசிகசாலை ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தி 2024 சனவரி 01 திகதி முதல் 2025 செப்டம்பர் 30 திகதி வரை ரூபா 8,583,832 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.	பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஆளணியினரை இடமாற்றம் செய்வது தொடர்பாக உரிய முறைமையொன்றை செயற்படுத்தாத காரணத்தால் இந்த பிரச்சினையான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இடமாற்ற கொள்கையொன்றை தயாரித்த பின்னர் அவர்களை உரியவாறு நிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென.	- மேற்படி -
(vi)	ப/தியதலாவ மத்திய மகா வித்தியாத்தில் 2025 சனவரி 01 திகதி முதல் 2025 ஜுலை 31 திகதி வரை 17 மேலதிக ஆசிரியர்களிற்காக ரூபா 11,531,405 தொகையும், 2025 சனவரி 01 திகதி முதல் 2025 ஜுலை 31 திகதி வரை 06 மேலதிக பிரதி அதிபர்களிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 10,114,017 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.	வருடாந்த இடமாற்ற செயன்முறையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாடசாலைகளிற்கு மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளிற்கு பிரதி அதிபர்களை நிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென.	அதிபர்களை உரியவாறு சமப்படுத்த தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(vii)	ப/தியதலாவ மத்திய மகா வித்தியாத்தில் 11 ஆசிரியர்கள் ஒரு வாரத்தில் 20 முறைகளிற்கும் குறைவாக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அவதானிக்கப்பட்டதுடன், இடமாற்றத்திற்கா	ஆசிரியர்களை குறை பயன்பாடின்றியவாறு மேலதிக கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைத்து கடமையில் ஈடுபடுத்தவும் மருத்துவ பரிந்துரையின் மீது	கடமையில் ஈடுபடுத்தியுள்ள ஆசிரியர்கள் உரிய முறை அளவுகளை மேவுகை செய்யும்

	க பாடசாலையினால் விடுபிக்கப்பட்டதாக குறிப்பிட்டு இரண்டு ஆசிரியர்களிற்காக 06 மாதங்கள் மற்றும் சுமார் ஒருவருட காலமாக நேரசூசி வழங்கப்பட்டு இருக்கவில்லை.	சுகையீன விடுப்பு பெற்றுக் கொண்ட காரணத்தால் கற்பித்தல் நேரசூசி வழங்குவதன் மூலம் மாணவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு தாக்கம் ஏற்பட முடியுமாகையால் ஒரு ஆசிரியை மற்றும் இணைக்கப்பட்டுள்ள ஏனைய ஆசிரியைக்கு நேரசூசி வழங்காது வாசிகசாலை நடவடிக்கைகள், சலுவை முறை மேவுகை, நாடகம் மற்றும் கலை பயிற்சி வழங்கும் நடவடிக்கை போன்ற வெளிச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதென.	நேரசூசி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.7 தலைப்பு 712 - உள்ளுராட்சி திணைக்களம்

(அ) உள்ளுராட்சி அதிகார சபை மேற்பார்வை – நிலுவை வருமானம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்காக ஊவா மாகாணத்தில் உள்ளுராட்சி நிறுவனங்களிற்கு கிடைக்க வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானம் ரூபா 708,742,329 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	குறித்த நிலுவை வீதவரி மற்றும் ஏனைய வருமானத்தை அறவிடுவது தொடர்பாக உள்ளுராட்சி நிறுவனங்களை அறிவுருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அது தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து குறித்த நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதென.	சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	1979 இலக்கம் 42 கொண்ட மாநகர சபை மற்றும் நகர சபை (திருத்திய) சட்டத்தின் மற்றும் 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 129(2) பிரிவுகளின் ஏற்பாடுகள் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களிற்கு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 172,741,560 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 401,422,249 தொகை உள்ளுராட்சி நிறுவனங்களிற்கு கிடைத்திருக்கவில்லை.	மீளப்பெறும் பிரகடன ஏற்பாடுகள் பிரகாரம் கோரப்படாத முத்தரை கட்டணம் மீள் விடுவிப்பு செய்யப்படுவதில்லையென.	அரசியலமைப்பின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களை குறைக்க முடியாததால் குறித்த தொகையை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீட்டு சான்றிதழிற்காக அறிவிட வேண்டிய தொகை

	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஊவா மாகாணத்தில் உள்ளுராட்சி அதிகார சபைகளின் அலுவலர்கள் மற்றும் முகவர்களிற்கு 04 சம்பவங்களிற்காக விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளிற்காக ரூபா 4,081,641	அறிவிட வேண்டிய ஒவ்வொறு மிகை அறவீடுகளிற்காகவும் கருத்து தெரிவித்துள்ளதென.	துரிதமாக மிகை அறவீட்டை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

1.5.8 தலைப்பு 714 - விவசாய திணைக்களம்

(அ) வெளிப்படையான முறைகேடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உலக வங்கி உதவியின் கீழ் கொவிட் 19 அவசர நிலைமையின் மீது மொனராகல மாவட்டத்தில் ரூபா 16.5 மில்லியன் செலவில் நிர்மாணித்திருந்த இரண்டு களஞ்சியங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சினால் 2025 செப்டம்பர் 06 திகதி ஊவா மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவற்றில் பிபில மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள கொள்ளளவு 50MT கொண்ட களஞ்சியம், கமநல அமைப்பொன்றின் அங்கத்தவர் ஒருவரிற்கு உரிய நடைமுறைக்கு மாற்றமாக, கட்டண அறவீடின்றி மற்றும் உடன்படிக்கை இன்றி 2024 ஒக்டோபர் 02 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், பல்வேறு வகையான விதை வகைகளை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து இலாபப் பங்கொன்றை வைத்துக் கொண்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது.	விதைகள் களஞ்சியம் விளைவற்ற சொத்தொன்றாக காணப்படுவதை தவிர்ப்பது மற்றும் குறித்த களஞ்சியத்தை பிரதேசத்தினுள் பிரபள்ளியப்படுத்தும் நோக்கில் களஞ்சியம் விதை உற்பத்தி சங்கத்திற்கு தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டதாகவும் தற்போது முறையான உடன்படிக்கையின் மூலம் களஞ்சிய பயன்பாட்டிற்காக விதை உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உடன்படிக்கை பிரகாரம் கடந்த பெறும்போக தொகை செலுத்தப்பட்டுள்ளதென.	களஞ்சியத்தை முறையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

வியைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கொவிட் 19 அவசர நிலைமையினுள் உலக வங்கி உதவியின் கீழ் கிடைத்த நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 35,307,661 தொகை செலவில் 2023 ஆண்டில் பிந்துனுவெவ சேவை பயிற்சி நிறுவனத்தின் மற்றும் பொரலந்த கால்நடை பண்ணையில் நிர்மாணித்து விவசாய திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 02 வெங்காய விதை	2026 ஆண்டில் செயற்படுத்த எதிர்பார்க்கும் செயற்திட்டங்களிற்காக இந்த களஞ்சியங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதென.	சொத்துக்கள் விளைவற்று காணப்படாதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

களஞ்சியங்கள், ஒரு விதை கிழங்கு களஞ்சியம் மற்றும் ஒரு மேலதிக உணவுப் பயிர் விதை களஞ்சிய நிர்மாணத்தை மேற்கொண்டு 03 ஆண்டுகளிற்கு அன்மித்த காலம் கடந்துள்ள போதும் அந்த கட்டிடங்களை நிர்மாணித்ததன் எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன.		

1.5.9 தலைப்பு 715 - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம் - விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொரலந்த கால்நடை பண்ணை வளவில் ஒரு குழாய் கிணற்றை அமைப்பதற்காக 2024 திசெம்பர் 17 திகதிய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 771,366 செலுத்தியிருந்த போதும் 2026 சனவரி 29 திகதி வரை அந்த குழாய் கிணற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த நிர்மாணத்தை மேற்கொள்ள முன்னர் அதன் பிரவேச பாதையை அமைத்துத் தருமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அறிவித்துள்ளதாகவும் அதன் பிரகாரம் பாதையை அமைத்த பின்னர் குறித்த வேலையின் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதாகவும் காணப்படும் பெறுகைகள் செயன்முறையினுள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் துரிதமாக தேவையான முன்நடவடிக்கைகளை மேற்கொள்வதெனெ.	எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) பெறுகைகள் - வழங்கல் மற்றும் சேவைகள்

பொரலந்த கால்நடை பண்ணையினுள் செயற்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டத்திற்காக 1,877,144 பெறுமதியான 7KVA diesel வகை மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை தனியார் கம்பனியொன்றிலிருந்து கட்டளை இடப்பட்டிருந்த போதும் 2026 பெப்ரவரி 05 திகதி வரை இந்த மின் பிறப்பாக்கி கால்நடை பண்ணைக்கு கிடைத்திருக்கவில்லை. மின் பிறப்பாக்கியை வழங்குவது தொடர்பாக குறித்த கம்பனியினால் தனியார் வணிக வங்கியொன்றின் ஊடாக சமர்ப்பித்திருந்த ரூபா 159,080 ஆன செயலாற்றுகை காப்பின் செல்லுபடியாகும் காலம் 2025 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்திருந்த போதும்	மின்சாரத்தை பெற்றுக் கொள்வதன் தாமதம் அதனுடன் இணைந்த முதலாவது கொள்வனவு செய்த மின் பிறப்பாக்கியை பரீட்சிப்பதில் ஏற்பட்ட தாமதத்துடன் அதன் கொடுப்பனவு தாமதித்ததனால் இரண்டாம் மின் பிறப்பாக்கியை எதிர்பார்த்த காலத்தினுள் பெற்றுத்தர இணங்கிய போதும் அதனை எதிர்பாராத விதமாக பெற்றுத்தராமை இந்த பிரச்சினைக்கு காரணமானதெனெ.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்த வேண்டும்.

அந்த செயலாற்றுகை காப்பினை பணமாக்கி இருக்கவில்லை.

1.5.10 தலைப்பு 721 - ஆயுர்வேத திணைக்களம்

செயற்திட்டங்களை செயற்படுத்துதல் - தாமதமான செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டில் ஒதுக்கீட்டின் மீது ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்காக களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் புள்ளிவிபர தகவல் தரவு தொகுதியொன்றை தயாரிப்பதற்காக ரூபா 1,890,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு 2024 மற்றும் 2025 ஆண்டுகளின் போது ரூபா 1,134,000 இனை செலுத்தியிருந்தது. இந்த செயற்பாட்டை மேற்கொள்வதற்காக உரிய நிறுவனத்திற்கு 2024 திசெம்பர் 04 திகதி ஒப்பந்தத்தை வழங்யிருந்ததுடன் அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 30 திகதிற்கு முன்னர் குறித்த மென்பொருளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் 2025 நவம்பர் 07 ஆம் திகதி அளவிலும் அந்த பணிகளை பூர்த்தி செய்திருக்கவில்லை.	நடைமுறை ரீதியாக தொகுதியின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதால், தகவல் தொழில்நுட்ப அலகின் ஆரம்ப தொழில்நுட்ப அறிக்கை கிடைத்த பின்னர் முன்வேலைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தித்த பின்னர் திணைக்கள தேவைப்பாட்டின் பிரகாரம் தொகுதியின் செயற்பாடுகளை சீர்செய்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள மாகாண ஆயுர்வேத ஆணையாளரிற்கு அறிவித்துள்ளதென.	உரிய காலத்தினுள் பணிகளை நிறைவு செய்து எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.11 தலைப்பு 736 - பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகம்

(அ) அரச உத்தியோகத்தரினது முற்பண “பீ” கணக்கு - அறவிட வேண்டிய கடன் மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண சபையின் 05 நிறுவனங்களிற்குரியதாக ரூபா 1,160,621 ஆன கடன்படுநர் மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடன் மீதிகளை படிப்படியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென.	அனைத்து கடன் மீதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும்.

(ஆ) இடமாற்றம் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர்களினது கடன் மீதி

(i)	ஊவா மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் 07 அலுவலகங்களிற்கு இடமாற்றம் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர்களினது ரூபா 33,752,233 ஆன கடன் மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -
(ii)	அரச உத்தியோகத்தர்களினது முற்பண " பீ " கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 நிறுவனங்களிற்குரியதாக ரூபா 5,769,710 ஆன கடன்கொடுனர் மீதியொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -

(இ) பெறுகைகள் - வழங்கள் மற்றும் சேவைகள்

(i)	ஊவா மாகாண சபை மற்றும் தனியார் கம்பனி ஒன்றிற்கிடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்படும் சூரியவலுத் தொகுதி செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் 6(xvi) பந்தி பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி முதல் 12 மாத காலத்தினுள் 46.35 ஆன மெகாவொட் கொள்ளலவுடன் கூடிய சூரிய மின்சார தகடுகளை பொருத்தி நிறைவு செய்ய வேண்டிய போதும், 2025 திசெம்பர் 31 திகதியன்று உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 879 கூரைகளின் 480 இல் மாத்திரம் சூரிய மின்சார தகடுகள் பொருத்தப்பட்டிருந்தன. 04 ஆண்டு காலம் கடந்துள்ள போதும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.	செயற்திட்டத்திற்காக ஓராண்டு காலத்திற்காக உடன்படிக்கை செய்த போதும் அந்த காலப் பகுதியில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் மீது குறித்த கால எல்லையினுள் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாததன் மீது உடன்படிக்கை காலத்தை நீடித்துள்ளதாகவும் பட்டியலில் குறிப்பிடப்படும் கட்டிட 608 கூரை அலகுகளிற்கான அனுமதி இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவில்லை எனவும் அனுமதியை பெற்றுக் கொள்ளும் பிரச்சினையின் மீது குறித்த அலகுகளிற்காக சூரிய மின்சார தகடுகளை பொருத்த முடியவில்லையென.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும்.
(ii)	ஊவா மாகாண சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிதியங்கள் தொடர்பாக மாதிரி பரீட்சிப்பின் போது 03 நிதியங்களிற்குரியதாக மீளாய்வாண்டினுள் நிதியத்தின் நோக்கதினை மேற்கொள்வதற்காக ரூபா 4,056,300 இனை பயன்படுத்தி இருந்ததுடன் அது 03 நிதியத்திற்கு சொந்தமாக ஆண்டினுள் நிலவிய பெறுமதியில் 6 சதவீதமான குறைந்த வீதமானது. இந்த நிதியங்கள்	நிதியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதென.	குறித்த நோக்கம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும்.

நிறுவப்பட்டுள்ள நோக்கங்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்தாது மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் ரூபா 60,432,549 ஆன நிலையான வைப்பு மற்றும் காசு மீதியொன்றை நிதியத்தினுள் நிறுத்திவைத்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

1.5.12 தலைப்பு 738 - பிரதி பிரதான செயலாளர் (கட்டுப்பாடு) அலுவலகம்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	இணக்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தாபன விதிக் கோவை XIX அத்தியாயத்தின் 5.8 பிரிவு	ஊவ மாகாண பிரதான செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் 2017 செப்தம்பர் முதல் 2025 ஒக்தோபர் வரை மின்சாரம் மற்றும் நீர் பட்டியலகளிற்காக் ரூபா 1,080,150 உம் 2025 சனவரி முதல் செப்டம்பர் வரை Peo TV(Silver) இணைப்பிற்காக ரூபா 37,746 உம் ஊவ மாகாண நிதியத்திலிருந்து செலுத்தியிருந்தது.	மாகாண சபை அமைச்சிடம் எழுத்து மூலம் வினவ நடவடிக்கை எடுத்துள்ளதாக மற்றும் அந்த வினவுதலிற்கு பதில் கிடைத்த பின்னர் இந்த பட்டியல் கொடுப்பனவு தொடர்பாக குழு ஒன்றின் மூலம் தீர்மானத்தை எடுத்து அந்த தீர்மானத்தை மதிப்பிற்குரிய ஆளுனரிற்கு சமர்ப்பித்து, அவருடைய அங்கீகாரத்தின் மீது இந்த கொடுப்பனவு தொடர்பாக முன் நடவடிக்கை மேற்கொள்வதென.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.